# இலங்கையில் மாற்றுக்கருத்துக்களுக்கு எதிரான அடக்குமுறை

**ஒக்ரோபர் 2014**



பாராளுமன்றத்தை நோக்கி 2014 ஒக்ரோபர் 24 அன்று பேரணியாகச் சென்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிராகg; பொலிசார் நீரைப் பீய்ச்சியடித்ததுடன், கண்ணீர்ப்புகைக் குண்டும் பயன்படுத்தினார்கள்

INFORM Human Rights Documentation Centre
www.ihrdc.wordpress.com informcolombo@gmail.com

## உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்


அ. அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் என பார்க்கப்பட்டவர்கள் மீது மரண அச்சுறுத்தல்கள், தொந்தரவு, பயமுறுத்தல் மற்றும் கட்டுப்பாடுகள்

ஆ. பேச்சுச் சுதந்திரத்தின் மீறல்

இ. ஒன்று கூடுவதற்கான சுதந்திரத்தை மீறுதல்

ஈ. ஐ.நா. விசாரணைக்கு சாட்சியமளிப்பதற்கு எதிராக அச்சுறுத்தல்கள்

உ. அரசாங்கம் பற்றி விமர்சனக் கருத்துக்களை வழங்கக்கூடியவர்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்குத் தடைகள்

ஊ. மாணவ செயற்பாட்டாளர்களை அடக்குதல்

எ. எதிர் அரசியல் கட்சிகளை அடக்குதல்


*இலங்கையின் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தவும் கண்காணிக்கவும் 1990 இன்ஃபோர்ம் INFORM நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. குறிப்பாக இன மோதல்களும் போரும் நிலவிய சூழலிலேயே இது உருவாக்கப்பட்டது. உள்ளூர், தேசிய, சர்வதேச மட்டங்களில் எழுத்துமூலமும் வாய்மொழி மூலமும் இடையீடுகளை மேற்கொள்வதிலும், அறிக்கைகளை வெளியிடுவதிலும், அது தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. படிப்படியாகவும் அடிக்கடியும் உரிமைகள் மீறப்படுகின்ற சமூகங்களை மையப்படுத்தி செயற்படுவதிலும் இன்ஃபோர்ம் தன்னை அர்ப்பணித்தது. தற்போது தேர்தல்களைக் கண்காணிப்பதிலும் கருத்துச் சுதந்திரத்திற்காகச் செயற்படுவதிலும் மனித உரிமைகள் காப்பாளர்களை மையப்படுத்தியும் இன்ஃபோர்ம் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது. இலங்கையில் கொழும்பை அடிப்படையாகக் கொண்டு இன்ஃபோர்ம் இயங்கி வருவதோடு, உள்ளூர் செயற்பாட்டாளர்கள், குழுக்கள் வலைப்பின்னல்களுடனும், பிராந்திய (ஆசிய) சர்வதேச மனித உரிமைகள் வலைப்பின்னல்களுடனும் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றது.*

## சாராம்சம்

சர்வதேச மனித உரிமைகளினதும், மனிதாபிமானச் சட்டத்தினதும் சார்த்துரைக்கப்பட்ட மீறல்களையிட்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்கான சமர்ப்பணங்களுக்கான காலக்கெடு அணுகிக்கொண்டிருக்கையில், ஐ.நா. விசாரணைக்கு ஒத்துழைப்பதற்கு முயற்சித்ததாக வடக்கில் தமிழ் ஆள் ஒருவர் கைதுசெய்யப்பட்டதுடன், பெருமளவு ஏனையோர் தேடப்பட்டு, மறைந்திருப்பதற்கு கட்டாயப்படுத்தப்பட்டனர். ஐ.நா. விசாரணைக்கான சமர்ப்பணங்களுக்கான காலக்கெடுவின் நீடிப்பொன்றை வட மாகாண சபையின் வெளிப்படையாகப் பேசும் தமிழ் உறுப்பினர் ஒருவர் ஏன் கேட்டார் என்பதற்கான “தெளிவுபடுத்தலை” ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட வட மாகாண ஆளுனர் கோரியிருந்தார். “ஐ.நா. யுத்தக் குற்றங்கள் தொடர்பான விசாரணையாளர்களுக்கு உறுதிப்படுத்தப்படாத தகவல் வழங்கிய தமிழர் தேசியக் கூட்டமைப்பின் சார்த்துரைக்கப்பட்ட சூழ்ச்சியையிட்டு அரசாங்கம் விசாரணையை ஆரம்பித்துள்ளதாகவும், விசாரணைக் குழாமுக்கான மின்னஞ்சல்கள் கண்காணிக்கப்படுவதாகவும் ஊடகங்கள் அறிக்கையிட்டிருந்தன. ஐ.நா. விசாரணைக் குழாமுக்கு தகவலை அனுப்புவதாகவும், எல்.ரி.ரி.ஈ.ஐப் புத்துயிரளிப்பதற்கு ஆதரவளிப்பதாகவும் குற்றஞ்சாட்டி சிங்களச் செய்திப்பத்திரிகையொன்றினால் பயங்கரவாத அனுதாபிகளாக நன்கு அறியப்பட்ட மனித உரிமைகள் காப்பாளர்கள் நாமம் சூட்டப்பட்டனர். 2014 மார்ச் முதல் எவ்வித குற்றச்சாட்டுக்களும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் காப்பாளரான தமிழ்ப் பெண் ஒருவரை விடுவிப்பதற்கான எதிர்ப்புப் பிரச்சாரமொன்றில் சம்பந்தப்பட்ட பின்னர் வவுனியா பிரஜைகள் குழுவின் (வடக்கில்) தலைவர் தாக்கப்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டியிருந்தது.

உண்மையைக் கண்டறியும் நோக்கத்தில் கொம்பனி வீதியில் இலங்கை துறைமுக அதிகாரசபை பாதுகாப்புப் பயிற்சி நிறுவனத்திற்கு விஜயம் செய்த போது கும்பலொன்றினால் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றும், இரு இதழியலாளர்களும் தாக்கப்பட்டனர். ட்ரான்ஸ்பேரன்ஸி இன்ரர்நெஷனல் ஸ்ரீ லங்காவினால் (TISL) ஒழுங்குசெய்யப்பட்டிருந்த இதழியல் மீதான நிகழ்ச்சியொன்றுக்கு தொந்தரவுகளும், தடைகளும் இருந்தன. சிரேஷ்ட பணியாளரும், அவர்களது குடும்ப உறுப்பினர்களும், வள நபர்களும் மற்றும் பங்கெடுப்பாளர்களும் பயமுறுத்தும் தொலைபேசி அழைப்புக்களையும், குறுஞ்செய்திகளையும் பெற்றனர். சுய-நிர்ணயத்திற்கான உரிமைக்காகப் போராடும் ஒரு மாதாந்த தமிழ் செய்திப்பத்திரிக்கு இராணுவம் தொல்லை கொடுத்ததுடன், பத்திரிகையை அச்சிடுவதற்கு முன் தம்மைக் கலந்தாலோசிக்குமாறு அச்சக உரிமையாளர்களுக்கு கோரிக்கையும் விடுத்தது. பத்திரிகையின் விநியோகஸ்தர் ஒருவர் இராணுவ முகாமொன்றில் விசாரிக்கப்பட்டு, பின்னர் தாக்கப்பட்டார். யாழ்ப்பாணத்தில் சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளரும், பத்திரிகைச் சுதந்திரச் செயற்பாட்டாளருமான ஒருவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். ரயில்வே ஊழியர்களின் வேலை நிறுத்தத்திற்கு எதிராக இடைக்கால உத்தரவொன்று பிறப்பிக்கப்பட்ட அதேவேளை, தொழிற்சங்கத் தலைவர்களும், எதிர்ப்புத் தெரிவித்த மீனவர்களும் உடல்ரீதியாகத் தாக்கப்பட்டார்கள். காணாமல் போனவர்களுக்கான வருடாந்த நினைவு தினத்தை ஒழுங்குபடுத்துவதில் சம்பந்தப்பட்டிருந்த மனித உரிமைகள் காப்பாளர்களின் நற்பெயரைக்கெடுப்பதற்காக சுவரொட்டியொன்று ஒட்டப்பட்டிருந்ததுடன், நிகழ்ச்சிக்கு முன்னரான இரவு அவர்களின் வீடுகளில் ஒன்றுக்கு கல்லெறியப்பட்டது. மூன்று புறம்பான இடங்களிலும், சம்பவங்களிலும் குறைந்தபட்சம் மூன்று தடவைகளில் எதிர்ப்புக்களில் சம்பந்தப்பட்டிருந்த மாணவ செயற்பாட்டாளர்கள் தாக்கப்பட்டதுடன், பெருமளவு மாணவர்களுக்கு காயங்களும் ஏற்பட்டன. உயர் கல்வி அமைச்சர் மீண்டும் மாணவர்களின் நற்பெயரைக் கெடுத்ததுடன், அவர்களை “ஈக்கள்” எனக் குறிப்பிட்டதுடன், பல்கலைக்கழகமொன்றுக்கான அமைச்சரின் விஜயம் தொடர்பில் 12 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அரசாங்கத்திற்கு எதிராக விமர்சனக் கருத்துக்களை வெளியிட்டவர்களாகக் கருதப்பட்டவர்களுக்கு எதிராக சுதந்திர இயக்கம் கட்டுப்படுத்தப்பட்டது. இரு புறம்பான சம்பவங்களில் எல்.ரி.ரி.ஈ.ஐப் புத்துயிரளிப்பதற்கான முயற்சியில் சம்பந்தப்பட்டுள்ளதாக சார்த்துரைக்கப்பட்டிருந்த கொல்லப்பட்ட தமிழ் ஆள் ஒருவரின் மனைவியும், தாயும் அவர்கள் செல்லுபடியான ‘விசா’க்களைக் கொண்டிருந்து,

கடல்கடந்த நாடுகளுக்கான பிரயாணத்தைக் கட்டுப்படுத்தும் முறைமையான நீதிமன்ற கட்டளையைக் கொண்டிருக்காத போதிலும் வெளிநாட்டுக்குச் செல்வதிலிருந்த தடுக்கப்பட்டனர். பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி, யுத்தத்தினால் சின்னாபின்னமாகிய வட மாகாணத்தில் பெருமளவு பகுதிகளுக்கு பிரயாணம் செய்வதிலிருந்து வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்களை வைத்திருந்தவர்கள் தடுக்கப்பட்டதுடன், உலக உணவு தினம் தொடர்பிலான நிகழ்ச்சியொன்றுக்குச் சென்ற வேளை ஐ.நா. அதிகாரி ஒருவர் திருப்பி அனுப்பப்பட்டார்.

பெருமளவு சம்பவங்களில் பொலிசும், இராணுவமும், அரசாங்கமும் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்த அதேவேளை, பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புகளைக் கொண்டிருந்ததாகத் தோன்றும் “அடையாளம் காணப்படாத நபர்களினால்/குழுக்களினால்” ஏனைய சம்பவங்கள் இழைக்கப்பட்டிருந்தன. ஊடகங்களின் அறிக்கைகள் மீதான அடிப்படையில், ஏதேனும் சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்களைக் கைது செய்வதற்கும், வழக்குத் தொடுப்பதற்கும் அரசாங்கமும், பொலிசும் தீர்மானமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

## இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை - ஒக்ரோபர் 2014: சம்பவங்களின் பட்டியல்

| | சம்பவங்களின் திகதி | சம்பவங்களின் இடம் (மாவட்டம்) | சம்பவங்களின் விவரணம் | மூலம் |
|---|---|---|---|---|
| **அ.** | **அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் என பார்க்கப்பட்டவர்கள் மீது மரண அச்சுறுத்தல்கள், தொந்தரவு, பயமுறுத்தல் மற்றும் கட்டுப்பாடுகள்** | | | |
| 1. | 12 ஒக்ரோபர் 2014 | - | பயங்கரவாத ஆதரவாளர்களாக மனித உரிமைக் காப்பாளர்கள் நாமம் சூட்டப்பட்டனர் | http://www.rivira.lk/epaper/sunday/2014/10/12/index.html#15/z (In Sinhala) |
| 2. | 8 ஒக்ரோபர் | நெடுங்கேணி (வவுனியா மாவட்டம்) | வவுனியா பிரஜைகள் குழுவின் தலைவர் தாக்கப்பட்டார் | http://freejeyakumary.wordpress.com/2014/10/09/president-of-the-vavuniya-citizens-committee-attacked-for-organising-jeyakumary-protest/ |
| **ஆ.** | **பேச்சுச் சுதந்திரத்தின் மீறல்** | | | |
| 3. | 15 ஒக்ரோபர் | கொழும்பு மாவட்டம் | ஒரு தொகை இதழியலாளர்களுக்கு எதிராக மரண அச்சுறுத்தல் | http://srilankabrief.org/2014/10/fmm-challenges-the-government-to-bring-culprits-to-book/#more-20709 |
| 4. | 14 ஒக்ரோபர் | கொழும்பு மாவட்டம் | சிரேஷ்ட இதழியலாளருக்கும், அவரது குடும்பத்திற்கும் மரண அச்சுறுத்தல் | http://srilankabrief.org/2014/10/death-threats-to-senior-journalist-and-his-family-from-so-called-patriotic-force/ |
| 5. | 14 + 15 ஒக்ரோபர் | கொழும்பு மாவட்டம் | ட்ரான்ஸ்பேரன்ஸி இன்ரர்நஷனல் ஸ்ரீ லங்காவின் பணியாளர் குடும்பங்களுக்கும் மரண அச்சுறுத்தல் | http://www.tisrilanka.org/?p=12277 |
| 6. | ஒக்ரோபர் 3ஆவது வாரம் | யாழ்ப்பாண மாவட்டம் | வடக்கில் தமிழ் மாதாந்தப் பத்திரிகைக்கு தொந்தரவு | http://www.tamilnet.com/art.html?catid=13&artid=37449 |
| 7. | 1 ஒக்ரோபர் | யாழ்ப்பாண மாவட்டம் | யாழ்ப்பாணத்தில் சிரேஷ்ட இதழியலாளர் விசாரிக்கப்பட்டார் | http://www.tamilnet.com/art.html?catid=13&artid=37400 |
| **இ.** | **ஒன்று கூடுவதற்கான சுதந்திரத்தை மீறுதல்** | | | |
| 8. | 25 + 27 ஒக்ரோபர் | குஸ்சாலா (கம்பஹா மாவட்டம்) | தொழிற்சங்கப் பணியை அதைரியப்படுத்துவதற்காக தொழிற்சங்கத் தலைவர்கள் மீது தாக்குதல் | http://lankafocusnews.com/?p=30536 |
| 9. | 9 ஒக்ரோபர் | கோட்டை (கொழும்பு மாவட்டம்) | வேலை நிறுத்தம் மீது ரயில்வே தொழிற்சங்கங்களுக்கு எதிராக இடைக்கால உத்தரவு வழங்கப்பட்டது | http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=111850 |
| 10. | 21 ஒக்ரோபர் | மாளிகாவத்தை (கொழும்பு மாவட்டம்) | எதிர்ப்புத் தெரிவித்த மீனர்கள் மீது கற்கள் எறியப்பட்டன | http://www.ceylontoday.lk/51-75961-news-detail-fishers-protesting-eu-ban-pelted-with-stones.html |

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | 25 ஒக்ரோபர் | கம்பஹா மாவட்டம் | 'காணாமல் போனோரை நினைவு கூருவதற்கு' எதிராகச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன | http://srilankabrief.org/2014/10/posters-pasted-against-remembrance-of-the-disappeared-to-be-held-tomorrow/ |
| 12. | 26 ஒக்ரோபர் | நீர்கொழும்பு (கம்பஹா மாவட்டம்) | மனித உரிமைக் காப்பாளர்களின் வீடுகள் மீது கல்லெறியப்பட்டன | http://srilankabrief.org/2014/10/disappearances-in-sri-lanka-our-message-to-govt-by-brito-fernando/ |
| **ஈ.** | **ஐ.நா. விசாரணைக்கு சாட்சியமளிப்பதற்கு எதிராக அச்சுறுத்தல்கள்** | | | |
| 13. | 27 ஒக்ரோபர் | முழங்காவில் (கிளிநொச்சி மாவட்டம்) | OISLக்கு உதவுவதாக கூறப்படும் தமிழ் ஆளை OISL கைது செய்கிறது | http://www.colombomirror.com/?p=715 |
| 14. | 31 ஒக்ரோபர் | யாழ்ப்பாணம் (யாழ்ப்பாண மாவட்டம்) | OISLக்கான வட மாகாண சபை உறுப்பினர்களின் வேண்டுகோள் மீதான தெளிவுபடுத்தலை அரசாங்கம் கோருகின்றது | http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=113229 |
| 15. | 25 ஒக்ரோபர் | - | OISLக்கு த.வி.கூ. தகவலை வழங்குவதையிட்டு விசாரணை ஆரம்பம் | http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=113229 |
| 16. | 30 ஒக்ரோபர் | - | OISLக்கான மின்னஞ்சல்களைக் கண்காணிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு முயல்கின்றது | http://www.tamilnet.com/art.html?catid=13&artid=37456 |
| 17. | 30 ஒக்ரோபர் | வன்னி (கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள்) | OISLக்கான சமர்ப்பணங்கள் பற்றி தம்மை எச்சரிக்கை செய்யுமாறு இணையதள மற்றும் புகைப்பட பிரதியெடுக்கும் வழங்குனர்களை இராணுவம் கேட்கின்றது | http://www.tamilnet.com/art.html?catid=13&artid=37456 |
| **உ.** | **அரசாங்கம் பற்றி விமர்சனக் கருத்துக்களை வழங்கக்கூடியவர்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்குத் தடைகள்** | | | |
| 18. | 11 ஒக்ரோபர் | வடக்கில் பல மாவட்டங்கள் | அங்கீகாரமின்றி முன்னாள் யுத்த வலயத்திற்கு பிரயாணம் செய்வதிலிருந்து வெளிநாட்டவர்களுக்குத் தடை | http://www.sundaytimes.lk/141012/news/travel-restrictions-as-president-visits-north-122354.html<br>http://www.defence.lk/new.asp?fname=Foreign_Passport_holders_traveling_to_the_North_20141030_02 |
| 19. | 8 ஒக்ரோபர் | கிளிநொச்சி | ஓமந்தையில் உயர் உ.வி.தா. அதிகாரியும், நூற்றுக்கணக்கான ஏனையோரும் திருப்பி அனுப்பப்பட்டனர் | http://www.sundaytimes.lk/141019/news/top-fao-official-hundreds-of-others-turned-away-at-omanthai-123252.html |

| | | | | |
|---|---|---|---|---|
| 20. | 5 ஒக்ரோபர் | கட்டுநாயக்க (கம்பஹா மாவட்டம்) | இலங்கையிலிருந்து, வெளியேறுவதிலிருந்து கொல்லப்பட்ட 'சந்தேகநபரின்' மனைவி தடுக்கப்பட்டார் | http://tamilguardian.com/article.asp?articleid=12460 |
| 21. | 21 ஒக்ரோபர் | கட்டுநாயக்க (கம்பஹா மாவட்டம்) | விமான நிலையத்திலிருந்து இலங்கையை விட்டு வெளியேறுவதிலிருந்து முன்னாள் தடுப்புக்காவல் கைதி (ஒரு தமிழ்த் தாய்) தடுக்கப்பட்டார் | http://www.dailymirror.lk/54629/theiveegan-s-mother-prevented-from-leaving-sl<br>http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=112577 |
| **ஊ.** | **மாணவ செயற்பாட்டாளர்களை அடக்குதல்** | | | |
| 22. | 10 ஒக்ரோபர் | பம்பஹின்ன சந்தி (இரத்தினபுரி மாவட்டம் | சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவரின் உண்ணாவிரதம் தாக்கப்பட்டு, 20 பேர் காயமடைந்தனர் | http://www.sundaytimes.lk/141019/news/satyagraha-attackers-still-at-large-while-students-go-on-own-rampage-123091.html |
| 23. | 6 ஒக்ரோபர் | இரத்தினபுரி மாவட்டம | 12 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்; ஈக்களுக்கு மாணவர்களை உயர் கல்வி அமைச்சர் ஒப்பிடுகின்றார் | http://www.sundaytimes.lk/141019/news/satyagraha-attackers-still-at-large-while-students-go-on-own-rampage-123091.html |
| 24. | 1 ஒக்ரோபர் | ஹோமாகம (கொழும்பு மாவட்டம்) | உண்ணாவிரதமிருந்த மாணவ பிக்குகள் தாக்கப்பட்டனர் | http://www.lankaviews.com/sn/index.php?option=com_content&view=article&id=21848:2014-10-02-21-31-42&catid=100:2014-06-19-06-05-56&Itemid=151 (சிங்களம்)<br>http://www.lankaviews.com/sn/index.php?option=com_content&view=article&id=21806:2014-09-25-09-33-04&catid=69:2009-08-07-09-41-10&Itemid=130 (சிங்களம்) |
| 25. | 21 ஒக்ரோபர் | கொழும்பு மாவட்டம் | பொலிஸ் தாக்குதலில் 20 பல்கலைக்கழக மாணவர்கள் காயமடைந்தனர் | http://www.amnesty.org/en/library/asset/ASA37/013/2014/en/77d973b8-c8e9-4b48-8fdd-117dae225789/asa370132014en.pdf |
| **எ.** | **எதிர் அரசியல் கட்சிகளை அடக்குதல்** | | | |
| 26. | 21 ஒக்ரோபர் | கொழும்பு மாவட்டம் | எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும், இரு இதழியலாளர்களும் தாக்கப்பட்டனர் | http://www.dailymirror.lk/54673/journalists-among-unp-fact-finders-injured#sthash.9ZHt4zva.GqMaW99v.dpuf |
| 27. | 18 ஒக்ரோபர் | ஏழாலை (யாழ். மாவட்டம்)) | வட மாகாண சபை உறுப்பினர் விசாரிக்கப்பட்டார் | http://www.colombomirror.com/?p=502 |

## அ. அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் என பார்க்கப்பட்டவர்கள் மீது மரண அச்சுறுத்தல்கள், தொந்தரவு, பயமுறுத்தல் மற்றும் கட்டுப்பாடுகள்

### 1. பயங்கரவாத ஆதரவாளர்களாக மனித உரிமைக் காப்பாளர்கள் நாமம் சூட்டப்பட்டனர்

2014 ஒக்ரோபர் 12 அன்று சிங்கள மொழிச் செய்திப்பத்திரிகையான "ரிவிர"வில் "சுவிஸ் ஆதரவுடன் வெளிநாட்டுக்கு பாய்ந்தோட முற்பட்ட கோபியின் மனைவி எவ்வாறு கட்டுநாயக்காவில் கைது செய்யப்பட்டார்" என்ற தலைப்பின் கீழான கட்டுரையொன்றில், பிரசித்தமான மனித உரிமைக் காப்பாளர்களில் ஒருவர் எல்.ரி.ரி.ஈ.இன் அனுதாபியொருவராக நாமம் சூட்டப்பட்டிருந்தார். எல்.ரி.ரி.ஈ.இன் அனுதாபியொருவராக பிரசித்தமான மனித உரிமைக் காப்பாளரான ரூகி பெர்னாண்டோவை கட்டுரை குறிப்பிட்டிருந்ததுடன், சார்த்துரைக்கப்பட்டிருந்த எல்.ரி.ரி.ஈ. தலைவர் கோபிக்கு இடவசதி அளித்திருந்ததாகவும் குற்றஞ்சாட்டியிருந்தது. இலங்கை தொடர்பான மனித உரிமைகள் மீதான உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் விசாரணைக்கு வழங்குவதற்காக சாட்சியத்தை ரூகி பெர்னாண்டோ சேகரித்ததாக கட்டுரை ஊகம் தெரிவித்திருந்தது. அதே கட்டுரையில் புலி அனுதாபி ஒருவராக இன்னொரு மனித உரிமைக் காப்பாளரான மன்னாரைச் சேர்ந்த வண.இமானுவேல் செபமாலை நாமம் சூட்டப்பட்டிருந்தார். கொழும்புக்கு வருவதற்கும், யுத்தக் குற்றங்கள் மீது சாட்சியமளிப்பதற்கும் மாவீரர் குடும்பங்களுக்கு (யுத்தத்தில் இறந்த எல்.ரி.ரி.ஈ போராளிகளின் குடும்பங்களுக்குப் பயன்படுத்தப்படும் பெயர்) வண.செபமாலை 200,000 ரூபாவைச் செலுத்தியிருந்ததாக கட்டுரை சார்த்துரைத்திருந்தது. எல்.ரி.ரி.ஈ. ஆதரவாளர் ஒருவராக இன்னொரு மனித உரிமைக் காப்பாளர் திருமதி பாலேந்திரா ஜெயகுமாரி நாமம் சூட்டப்பட்டுள்ளார். காணாமல் போன தமிழ் இளைஞர் ஒருவரின் தாயாக ஜெயகுமாரி விளங்குவதுடன், உண்மைக்கும், நீதிக்கும் அவர் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார். ஏதேனும் குற்றச்சாட்டுக்கள் தாக்கல் செய்யப்படாமல் 2014 மார்ச் 14 முதல் அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.
http://www.rivira.lk/epaper/sunday/2014/10/12/index.html#15/z - சிங்களத்தில் (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

### 2. வவுனியா பிரஜைகள் குழுவின் தலைவர் தாக்கப்பட்டார்

வவுனியா பிரஜைகள் குழுவின் தலைவர் திரு.ஜி.தேவராஜா ஒக்ரோபர் 8 அன்று மாலை 5.30க்கும் 6.00க்கும் இடையில் தாக்கப்பட்டார். வவுனியாவில் ஒக்ரோபர் 10 அன்று அட்டவணைப்படுத்தப்பட்ட ஜெயகுமாரியை விடுவிப்பதற்கான எதிர்ப்பு இயக்கத்தையிட்டு (இது 2014 மார்ச் 14 முதல் குற்றச்சாட்டுக்கள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒரு பெண் மனித உரிமைக் காப்பாளரான பாலேந்திரன் ஜெயகுமாரியை விடுவிப்பதற்கேயாகும்) கலந்துரையாடுவதற்காக வவுனியா பிரஜைகள் குழுவுடனான பிற்பகல் கூட்டமொன்றுக்குத் தலைமை வகித்த பின்னர் தனது கடைக்கு அவர் சென்றுள்ளார். இரு மோட்டார் சைக்கிள்களில் சிவிலியன் உடுப்புக்களில் வந்த 4 பேர் இரும்புக் கம்பிகளினால் அவரைத் தாக்கியுள்ளனர். அவர் தலைக்கவசம் அணிந்திருந்ததினால் அவர் தலை மீது சில காயங்கள் ஏற்பட்டதாகவும், தாக்குதல்களின் காரணமாக தலைக்கவசம் சேதமடைந்ததாகவும் அறிக்கையிடப்பட்டிருந்தது. அவரை அடிக்கும் வேளை, அவரைத் தாக்கியோர் சிதைந்த தமிழில் "ஜெயகுமாரிக்காக நீ பிரச்சாரமொன்றை நடத்தப் போகிறாய். நீ அதை நிறுத்தாவிட்டால், நாம் உன்னைக் கொல்லுவோம்" எனப் பயமுறுத்தியுள்ளனர். இச் சம்பவம் நெடுங்கேணி இராணுவ முகாமுக்கும், பொலிஸ் நிலையத்திற்கும் இடையில் நடைபெற்றது. அவர் சிகிச்சையைப் பெறுவதற்காக உடனடியாக நெடுங்கேணி வைத்தியசாலைக்கு விரைந்து கொண்டு செல்லப்பட்டு, பின்னர் வவுனியா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டார்.



வைத்தியசாலையில் திரு.ஜி.தேவராஜா (Photo: #freejayakumary)

## ஆ. பேச்சுச் சுதந்திரத்தின் மீறல்

**3. ஒரு தொகை இதழியலாளர்களுக்கு எதிராக மரண அச்சுறுத்தல்**

ட்ரான்ஸ்பேரன்ஸி இன்ரர்நெஷனல் ஸ்ரீ லங்கா (TISL) என்ற தாபனத்தினால் நடத்தப்பட்ட இதழியல் பயிற்சிச் செயற்றிட்டமொன்றின் சான்றுப்பத்திரங்களை வழங்குவதற்காகக் கொழும்பில் ஒக்ரோபர் 15 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் பங்கெடுத்த இதழியலாளர்களுக்கும், ஒழுங்கமைப்பாளர்களுக்கும் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கும் பெருமளவு மரண அச்சுறுத்தல்கள் தேசப்பற்றுள்ள தேசியப் படை என அழைக்கப்படும் குழுவொன்றினால் விடுக்கப்பட்டன. மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டவர்கள் மத்தியில் இதழியலாளர்கள் திரு.ஜனூர் கிச்சிலன் மற்றும் திரு.அமதொரு அமரஜீவ ஆகியோர் விளங்குகின்றனர். நிகழ்ச்சியின் வள நபர்களான ஒழுங்கமைப்பாளர் திரு.ஷான் விஜேதுங்க, ராவய ஆலோசக பத்திரிகை ஆசிரியர் திரு.விக்டர் ஐவன் ஆகியோரும் அச்சுறுத்தும் குறுஞ்செய்திகளைப் பெற்றனர். 'தேசப்பற்றுள்ள தேசியப் படை' இன்னொரு பொம்மைக் குழு என்றும், இது புலனாய்வு முகவராண்மைகளினால் பாதுகாக்கப்படுகின்றது என்றும் சுதந்திர ஊடக இயக்கம் வலியுறுத்தியது. இக் கூற்று இதழியலாளர் திரு.அமதொரு அமரஜீவாவினால் மீள்வலியுறுத்தப்பட்டதுடன், அச்சுறுத்தல் தொலைபேசி அழைப்புக்களை எடுப்பதற்கு பயன்படுத்தப்படும் நடமாடும் தொலைபேசிகள் புலனாய்வு அலுவலர்களுக்குச் சொந்தமானவை எனக் குறிப்பிட்டுள்ளார். http://srilankabrief.org/2014/10/fmm-challenges-the-government-to-bring-culprits-to-book/#more-20709 (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

**4. சிரேஷ்ட இதழியலாளருக்கும், அவரது குடும்பத்திற்கும் மரண அச்சுறுத்தல்**

ட்ரான்ஸ்பேரன்ஸி இன்ரர்நெஷனல் ஸ்ரீ லங்கா (TISL) என்ற தாபனத்தினால் நடத்தப்பட்ட துருவி ஆராயும் இதழியல் பயிற்சி நெறியொன்றில் அவரது வகிபங்குக்காக சிரேஷ்ட இதழியலாளரும்,

முன்னாள் பத்திரிகை ஆசிரியருமான ஜயசிறி ஜயசேகரவையும், அவரது குடும்பத்தையும் கொல்லப்போவதாக 'தேசப்பற்றுள்ள படை| என அழைக்கப்பட்ட அறியப்படாத கும்பலொன்று அச்சுறுத்தியது. பொலிஸ் மா அதிபருக்கான தனது முறைப்பாட்டில் சம்பவத்தின் நேரத்தையும், அவருக்கு கிடைத்த அச்சுறுத்தும் தொலைபேசி அழைப்புக்களின் தொலைபேசி இலக்கத்தையும் ஜயசேகர வழங்கியிருந்தார். எனினும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்களது எச்சரிக்கைகளுக்கு அவர் கீழ்படியாததை அடுத்து கொலை செய்ய முயற்சிப்பவர்கள் அவரது நடமாடும் தொலைபேசிக்கு அடிக்கடி அழைப்பினை விடுத்ததுடன், அவரது மனைவியையும், பிள்ளைகளையும் கொல்லப்போவதாகவும் அச்சுறுத்தினார்கள்.

பொலிஸ் மா அதிபருக்கான தனது உத்தியோகபூர்வ முறைப்பாட்டில், "எனது வாழ்க்கைத் தொழிலுக்கும், எனது உயிருக்கும் இந்த அச்சுறுத்தல்கள் பாரதூரமான அபாயமொன்றை முன்வைத்துள்ளதனால், எனது உயிரைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு நான் உங்களை வலியுறுத்துகிறேன். அதேவேளை தோதான விசாரணையொன்றை ஆரம்பிக்குமாறும், என்னை கொல்லப்போவதாக அச்சுறுத்தியவர்களுக்கு எதிராக சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறும் நான் உங்களை வலியுறுத்துகிறேன்" என ஜயசேகர குறிப்பிட்டிருந்தார்.
http://srilankabrief.org/2014/10/death-threats-to-senior-journalist-and-his-family-from-so-called-patriotic-force/
(கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

5. **ட்ரான்ஸ்பேரன்ஸி இன்ரர்நஷனல் ஸ்ரீ லங்காவின் பணியாளர் குடும்பங்களுக்கும் மரண அச்சுறுத்தல்**

ஒக்ரோபர் 14 அன்று, பயிற்றுவிக்கப்பட்ட இதழியலாளர்களுக்கு சான்றுப்பத்திரங்களை வழங்குவதற்கான TISL செயற்றிட்டத்தில் சம்பந்தப்பட்டிருந்த ட்ரான்ஸ்பேரன்ஸி இன்ரர்நஷனல் ஸ்ரீ லங்காகவின் (TISL) பெருமளவு பணியாட் உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தும் குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டன. அழைக்கப்பட்ட பங்கெடுப்பாளர்களில் 50%க்கு மேற்பட்டவர்களும் குறுஞ் செய்திகளையும், அழைப்புக்களையும் பெற்றனர். 2014 ஒக்ரோபர் 15 அன்று கொழும்பு 05இல் உள்ள கொழும்பு ஹொட்டேல் ஒன்றில் நிகழ்ச்சி நடைபெறுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் ஹொட்டேல் ஒதுக்கீட்டினை இரத்துச் செய்வதற்கும், நிகழ்ச்சியை நடத்துவதற்கு இன்னொரு இடத்திற்கு இடமாற்றுவதற்கும் TISLஐ இட்டுச் சென்றது. 'ஹொட்டேலைச்' சுற்றி சாதாரண உடையில் 15க்கு மேற்பட்ட வேடிக்கை பார்ப்பவர்களை புதிய இடத்திற்கு பங்கெடுப்பாளர்களை இடமாற்றுவதற்கு வசதியளிப்பதற்காக ஹொட்டேலில் தங்கியிருந்த இரு TISL பணியாட் உறுப்பினர்கள் அவதானித்துள்ளனர். மோட்டார் சைக்கிளொன்றைச் செலுத்திய வேடிக்கைபார்ப்பவர்களில் ஒருவர் 'ஹொட்டேலின்' முன்பக்கக் கதவை நோக்கி கடதாசித் துண்டொன்றை வீசியதுடன், அது அச்சுறுத்தும் செய்தியொன்றைக் கொண்டிருந்தது. ஒக்ரோபர் 15 அன்று காலை 7.30 முதல் முற்பகல் 11.00 வரை கொழும்பு 'ஹொட்டேலில்' இருந்த TISL பணியாட் உறுப்பினர்களை அவர்கள் புகைப்படமெடுத்துள்ளதாகவும், பணியாட் உறுப்பினர்கள் பற்றி மேலும் விபரங்களைப் பெறுவதற்கு அவர்கள் முயன்றுள்ளதாகவும் நம்பகமான வட்டாரங்கள் TISLக்கு அறிவித்திருந்தது. இரு பணியாட் உறுப்பினர்கள் வெளியேறிய பின் நண்பகலில் 'ஹொட்டேலுக்கு' மூன்று நபர்கள் வந்திருந்தார்கள். 'ஹொட்டேல்' பணியாளர்களிடமிருந்து TISL பணியாட் உறுப்பினர்கள் பற்றி மேலும் விபரங்களைப் பெறுவதற்கு அடையாளம் காணப்படாத நபர்கள் முயன்றதாக அவர்கள் தெரிவித்தனர்.
http://www.tisrilanka.org/?p=12277 (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)




"எல்.ரி.ரி.ஈ.க்கு இடமளிக்க வேண்டாம். இறுதி எச்சரிக்கை" (Photo: Sri Lanka Brief / BBC)

### 6. வடக்கில் தமிழ் மாதாந்தப் பத்திரிகைக்கு தொந்தரவு

*"இது நம் தேசம்"* என்ற மாதாந்தப் பத்திரிகையை விநியோகிப்பதற்காக அடிக்கடியிலான தொந்தரவுகளுக்கு தாம் உட்படுவதாக பருத்தித்துறை, குஞ்சர்கடையில் (யாழ்ப்பாணம் மாவட்டம்) உள்ள செய்திப்பத்திரிகை முகவர்கள் வலியுறுத்துகின்றனர். இதையொத்த முறைப்பாடுகள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருபாலையிலிருந்தும், அச்செழுவிலிருந்தும் கிடைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது. மேலும், யாழ்ப்பாணத்தில் உள்ள அச்சகத்திற்குச் சென்றுள்ள இலங்கை இராணுவ அலுவலர்கள் பத்திரிகையை அச்சிடுவதற்கு முன் தம்மைக் கலந்தாலோசிக்குமாறு அச்சக உரிமையாளர்களை அறிவுறுத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது. ஒக்ரோபர் மூன்றாவது வாரத்தில், கிளிநொச்சி மாவட்டத்தில் உருத்திரபுரத்தில் பத்திரிகையின் விநியோகஸ்தர் ஒருவர் தாக்கப்பட்டார். உருத்திரபுரத்தில் உள்ள இராணுவ முகாமில் விநியோகஸ்தர் விசாரணை செய்யப்பட்ட பின்னர் தாக்குதல் இடம்பெற்றதுடன், அவரைப் பின்தொடர்ந்து சென்ற குழு அவரைத் தாக்கியதுடன், நீர்த்தேக்கமொன்றினுள் பத்திரிகைகளையும் கொட்டியுள்ளது. இலங்கையில் செய்திப் பத்திரிகையொன்றாகப் பதிவுசெய்யப்பட்டுள்ள இந்த மாதாந்தப் பத்திரிகை ஈழத் தமிழர்களின் சுய-நிர்ணயத்திற்கான உரிமையின் கோட்பாடுகள் மீது உறுதியாக நிற்பதாகவும், சுதந்திரமான எழுத்தாளரும், பிரசித்தமான பத்தியெழுத்தாருமான எ.ஜோதிலிங்கம் என்பவரினால் பதிக்கப்படுவதாகவும் "தமிழ்நெற்" என்ற இணையதளம் குறிப்பிடுகின்றது.
http://www.tamilnet.com/art.html?catid=13&artid=37449 (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

### 7. யாழ்ப்பாணத்தில் சிரேஷ்ட இதழியலாளர் விசாரிக்கப்பட்டார்

சிரேஷ்ட இதழியலாளரும், ஊடகச் செயற்பாட்டாளருமான தயாபரன் இரத்தினம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள காங்கேசன்துறையில் விசேட குற்றவியல் விசாரணைப் பிரிவொன்றினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். கொழும்பிலும், வேறு இடங்களிலும் நடைபெற்ற ஊடக செயலமர்வுகளில் இதழியலாளர்களும், ஊடகச் செயற்பாட்டாளர்களும் கலந்துகொண்ட பின்னரே தொந்தரவுகள் ஆரம்பித்தன. யாழ்ப்பாணம் பத்திரிகைக் கழகத்துடன் இணைந்துள்ள திரு.தயாபரனை சர்வதேச ஊடக கண்காணிப்பாளர்களுடனான அவரது தொடர்புகள் பற்றியும், கொழும்பில் இலங்கைப் பத்திரிகை நிறுவனத்தில் இடம்பெற்ற தெற்கில் இருந்து வந்த இதழியலாளர்களுடனான பயிற்சிச் செயற்றிட்டங்கள் பற்றியும் சி.ஐ.டி. விசாரணையாளர்கள் விசாரித்தனர்.
http://www.tamilnet.com/art.html?catid=13&artid=37400 (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

## இ. ஒன்று கூடுவதற்கான சுதந்திரத்தை மீறுதல்

### 8. தொழிற்சங்கப் பணியை அதைரியப்படுத்துவதற்காக தொழிற்சங்கத் தலைவர்கள் மீது தாக்குதல்

*"எமது தொழிற்சங்க தலைவர் முறைமையானரீதியில் அடக்கப்படுகிறார்கள் என்பது தெளிவானதாகும்"* என கடிதமொன்றில் பொலிஸ் மா அதிபருக்கு சுதந்திர வர்த்தக வலய மற்றும் பொது ஊழியர் சேவைகள் சங்கம் (FTZ & GESU) முறையிட்டுள்ளது. சுதந்திர வர்த்தக வலயத் தொழிற்சாலையான எ.ரி.ஜி.சிலோன் பிறைவேற் லிமிற்றெற்றில் புதிதாக உருவாக்கப்பட்ட தொழிற்சங்மொன்றின் கிளைச் செயலாளர்களுக்கு எதிரான அண்மைய இரு தாக்குதல் சம்பவங்களைக் கடிதம் குறிப்பிட்டுள்ளது. எ.ரி.ஜி. சிலோன் பிறைவேற் லிமிற்றெற்றில் FTZ & GESUஇன் கிளைச் செயலாளர் திரு.தினேஷ் ரங்கன ஒக்ரோபர் 25 அன்று வேலைக்குச் செல்லும் வேளை தாக்கப்பட்டார். அதே தினத்தன்று, அதே தொழிற்சாலையில் பணியாற்றும் FTZ & GESUஇன் இன்னொரு கிளைச் செயலாளர் தொழிற்சங்க அலுவலகத்திற்கு செல்லும் வழியில் கும்பலொன்றினால் நிறுத்தப்பட்டு, இரும்புக் கம்பிகளினால் அவர் மீது தாக்குதல் நடத்த முயற்சிக்கப்பட்டது. சொல்லப்பட்ட தாக்குதல்களை எதிர்த்து கட்டுநாயக்க, அவயாவத்த சந்தியில் மறியல் போராட்ட இயக்கமொன்று நடத்தப்பட்டது.
http://lankafocusnews.com/?p=30536 - சிங்களத்தில் (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)




தொழிற்சங்க செயற்பாட்டாளர்கள் மீதான தாக்குதல்களுக்கு சுதந்திர வர்த்தகவலய ஊழியர்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர் (LankaFocusNews photo)

### 9. வேலை நிறுத்தம் மீது ரயில்வே தொழிற்சங்கங்களுக்கு எதிராக இடைக்கால உத்தரவு வழங்கப்பட்டது

அதன் வேலை நிறுத்தத்தை ரயில்வே வாழ்க்கைத்தொழில் தொழிற்சங்க கூட்டணி (PTUA) நிறுத்த வேண்டுமென ஒக்ரோபர் 9 அன்று இடைக்கால தடையுத்தரவொன்றை (கொழும்பு) கோட்டை மாவட்ட நீதிமன்றம் வழங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது. நாளாந்தம் நாடு முழுவதும் வழமையாக சுமார் 380

பிரயாணிகள் ரயில்கள் இயங்குகின்ற போதிலும், வேலைநிறுத்தத்தின் போது அரசாங்க சார்பு தொழிற்சங்க உறுப்பினர்களின் உதவியுடன் 80 ரயில்கள் மட்டுமே ஓடின.
http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=111850 (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

**10. எதிர்ப்புத் தெரிவித்த மீனவர்கள் மீது கற்கள் எறியப்பட்டன**

கொழும்பு, மாளிகாவத்தையில் மீன்பிடித்தொழில், நீரியல்வாழ் வளங்கள் அமைச்சுக்கு எதிரே எதிர்;ப்புத் தெரிவிப்பதற்காக கூடியிருந்த சுமார் 300 மீனவர்கள் மீது அமைச்சினால் என சார்த்துரைக்கப்பட்டவாறு கற்கள் எறியப்பட்டன. காயமடைந்த மூன்று மீனவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இலங்கையின் மீன்களை இறக்குமதி செய்வதை தடைசெய்வதற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானத்திற்கும், இலங்கையின் ஆள்புல நீர்களில் சீனக் கப்பல்கள் மீன் பிடிப்பதற்கும் எதிராகவே அவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார்கள்.
http://www.ceylontoday.lk/51-75961-news-detail-fishers-protesting-eu-ban-pelted-with-stones.html
(கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

**11. 'காணாமல் போனோரை நினைவு கூருவதற்கு| எதிராகச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன**

ஒக்ரோபர் 25 இரவன்று நீர்கொழும்பு பகுதியிலும், கொழும்பிலும் இரு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. இவை நீர்கொழும்பில் காணாமல் போனோரை நினைவுகூருதலின் ஒழுங்கமைப்பாளர்களும், வள நபர்களும் டொலர்களுக்காக காணாமல் போனோரை விற்பதாக வலியுறுத்தியிருந்தன. நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்திய சிங்கள செய்திப்பத்திரிகையான "ராவய"வின் ஆலோசகப் பத்திரிகை ஆசிரியர் திரு.விக்டர் ஐவன் மற்றும் நிகழ்ச்சியின் முக்கிய பேச்சாளரான பிரசித்தமான மனித உரிமைக் காப்பாளர் கலாநிதி (திருமதி) நிமால்கா பெர்னாண்டோ, காணாமல் போனோர் குடும்பங்களின் தலைவர் ஆகியோரின் புகைப்படங்களைச் சுவரொட்டிகள் உள்ளடக்கியிருந்தன. நிகழ்ச்சியின் ஆதரவாளர்களான வேறு செயற்பாட்டாளர்களினதும், ஒரு கலைஞனினதும், இதழியலாளர்களினதும் மற்றும் நிகழ்ச்சியின் ஒழுங்கமைப்பில் சம்பந்தப்பட்டிருந்த "Right to Life" என்ற மனித உரிமைகள் குழுவின் பெருமளவு பணியாட் உறுப்பினர்களினதும் புகைப்படங்களும் இருந்தன. சுவரொட்டிகளில் உள்ளடக்கப்பட்டிருந்த மனித உரிமைக் காப்பாளர்களின் வீடுகளுக்கு அருகிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.
http://srilankabrief.org/2014/10/posters-pasted-against-remembrance-of-the-disappeared-to-be-held-tomorrow/
(கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)




நீர்கொழும்பிலும், கொழும்பிலும் மனித உரிமை காப்பாளர்களைக் குற்றஞ்சாட்டி ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள்

12. **மனித உரிமைக் காப்பாளர்களின் வீடுகள் மீது கல்லெறியப்பட்டன**

*"காணாமல் போதல்களுக்கு எதிரான எனது 24 வருட சரித்திரத்தில், முதல் தடவையாக எனது வீட்டுக்கு கல்லெறியப்பட்டது. நேற்று இரவு (ஒக்ரோபர் 26) இரு கற்கள் மட்டுமே எறியப்பட்டன. காணாமல் போதல்களுக்கு எதிரான பொதுவான சண்டையில் வடக்கிலும், தெற்கிலும் உள்ள தாய்மார்களுக்கு இடையில் கட்டப்படும் பொதுவான கலந்துரையாடலையும், ஐக்கியத்தையும் நிறுத்துவதற்கு இந்த விடயங்கள் யாவும் செய்யப்படுகின்றன"* என காணாமல் போனோர் குடும்பங்களின் தலைவர் திரு.பிரிட்டோ பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஒக்ரோபர் 27க்காக அட்டவணைப்படுத்தப்பட்டதும், காணாமல் போனோர் குடும்பங்களினால் ஒழுங்குபடுத்தப்பட்டதுமான இலங்கையில் காணாமல் போனோரின் வருடாந்த நினைவு தினத்திற்கு முன்னைய இரவிலேயே சம்பவம் இடம்பெற்றது. பெர்னாண்டோவின் வீட்டுக்கு கல்லெறியப்படுவதற்கு முன்னதாக, தேசத்துரோகிகளாகவும், பேய்களாகவும் பெர்னாண்டோ உட்பட மனித உரிமைக் காப்பாளர்களை நாமம் சூட்டி சுவரொட்டிகள் அவர்களின் வீடுகளுக்கு முன்பாக ஒட்டப்பட்டிருந்தன.
http://srilankabrief.org/2014/10/disappearances-in-sri-lanka-our-message-to-govt-by-brito-fernando/
(கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

## ஈ. ஐ.நா. விசாரணைக்கு சாட்சியமளிப்பதற்கு எதிராக அச்சுறுத்தல்கள்

### 13. OISLக்கு உதவுவதாக கூறப்படும் தமிழ் ஆளை TID கைது செய்கிறது

இலங்கை மீது நடந்து கொண்டிருக்கும் OHCHR விசாரணையின் சாட்சிகள் மத்தியில் விநியோகிக்கப்படுவதற்கு உத்தேசத்தைக் கொண்டுள்ள படிவங்களை பங்கிடுவதற்காக கிளிநொச்சியில் 58 வயதான தமிழ் ஆள் ஒருவரைக் கைது செய்யுமாறு இலங்கைப் பொலிசின் பயங்கரவாத விசாரணைப் பிரிவு (TID) உத்தரவிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. அவர் OHCHR சாட்சியப் படிவங்களை விநியோகிக்கும் போது கிளிநொச்சி, முழங்காவிலில் TID அவரைக் கைது செய்ததாக

இலங்கைப் பொலிசார் வலியுறுத்துகின்றனர். மேலும் விசாரணைக்காக கொழும்பில் உள்ள TID தலைமை அலுவலகத்திற்கு அவர் கொண்டு வரப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

*"மூர்க்கத்தனமான யுத்தத்தினால் கிளிநொச்சியில் உள்ள சிவபுரம், இரஞ்சியைச் சேர்ந்த சின்னத்தம்பி கிருஷ்ணராஜா மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார். யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின் போது 'ஷெல்'லடியின் காரணமாக அவரது இளம் மகள்களில் ஒருவர் கொல்லப்பட்டார். அவ்வாறாக நடந்துகொண்டிருக்கும் ஐ.நா. விசாரணையில் ஆற்றல்வாய்ந்த சாட்சியாக விளங்குகின்றார். OHCHRஇன் சாட்சியப் படிவங்களை கொண்டு சென்றதாகக் கூறப்பட்டதற்காக அவரை TID கைது செய்தது. உடனடியாக அவரது பாதுகாப்பையும், பந்தோபஸ்தையும் உறுதிப்படுத்துவதற்காகவும், அவரை விடுவிப்பதற்காகவும் UNHRC தலையிட வேண்டும்"* என தமிழர் விடுதலைக் கூட்டமைப்புப் பேச்சாளரும், யாழ்ப்பாண மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் கே.பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.
http://www.colombomirror.com/?p=715 (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

### 14. OISLக்கான வட மாகாண சபை உறுப்பினர்களின் வேண்டுகோள் மீதான தெளிவுபடுத்தலை அரசாங்கம் கோருகின்றது



மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகரின் ஜெனிவா தளத்திலான அலுவலகத்திடம் தகவல் சேகரிப்பதற்காக தமக்கு மேலதிக நேரத்தை ஒதுக்கித்தருமாறு வட மாகாண சபை உறுப்பினரான அனந்தி சசிதரன் வேண்டுகோள் விடுத்தாரா என மாகாணத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்திடமிருந்து தெளிவுபடுத்தலொன்றை வட மாகாண ஆளுனர் இளைப்பாறிய மேஜர் ஜெனரல் ஜி.எ.சந்திரசிறி கோரியுள்ளார் (சசிதரனின் கணவர் ஒரு பிரசித்தமான எல்.ரி.ரி.ஈ. போராளியான எழிலன் ஆவார்).
http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=113229 (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

அனந்தி சசிதரன் (Aljazeera photo)

### 15. OISLக்கு த.வி.கூ. தகவலை வழங்குவதையிட்டு விசாரணை ஆரம்பம்

ஐ.நா. யுத்தக் குற்றங்கள் தொடர்பான விசாரணையாளர்களுக்கு உறுதிப்படுத்தப்படாத தகவல் வழங்கிய தமிழர் தேசியக் கூட்டமைப்பின் சார்த்துரைக்கப்பட்ட சூழ்ச்சியையிட்டு அரசாங்கம் விசாரணையை ஆரம்பித்துள்ளதாகவும், வவுனியாவைத் தளமாகக் கொண்ட சிரேஷ்ட த.வி.கூ. அலுவலர் ஆழ்வாப்பிள்ளை விஜேந்திரகுமார் அல்லது சண் 'மாஸ்ரர்' விசாரிக்கப்படவுள்ளதாகவும் 'த ஐலன்ட்' செய்திப்பத்திரிகை அறிக்கையிட்டிருந்தது. இரு அரசியல்வாதிகளின் - இவர்களில் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினர் - சார்த்துரைக்கப்பட்ட சம்பந்தத்தை உறுதிப்படுத்துமாறு விஜேந்திரகுமாரிடம் கேட்கப்பட்டுள்ளது. *"எல்.ரி.ரி.ஈ. பயிற்சியை பெற்றிருந்த சிவிலியன் ஒருவரான சின்னத்தம்பி கிருஷ்ணராசாவிடமிருந்து 25 வெற்று ஐ.நா. யுத்தக் குற்றங்கள் முறைப்பாட்டுப் படிவங்கள் மீட்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து விஜேந்திரகுமாரின் இல்லத்தில் பொலிஸ் தேடுதல் நடத்தியது. வன்னி, முழங்காவிலில் ஒக்ரோபர் 25 அன்று நாம் கிருஷ்ணராசாவைப் பாதுகாவலில் எடுத்தோம். விசாரணையின் கீழ், வவுனியாவில் ஒக்ரோபர் 22 பிற்பகலில் விஜேந்திரகுமாரிடமிருந்து வெற்றுப்படிவங்களை தாம் பெற்றுக்கொண்டதாக சந்தேக நபர் வலியுறுத்தியிருந்தார்"* என சிரேஷ்ட விசாரணை அலுவலர் ஒருவர் தெரிவித்திருந்ததாக 'த ஐலன்;ட்' குறிப்பிட்டிருந்தது.
http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=113229 (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

**16. OISLக்கான மின்னஞ்சல்களைக் கண்காணிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு முயல்கின்றது**

இலங்கை மீதான OISL விசாரணைகளுக்கு விலாசமிடப்படும் மின்னஞ்சல்களை இரகசியமாக 'ஸ்கான்| செய்வதற்கு கொழும்பில் உள்ள இணையதள வழங்குனர்களுக்கு இலங்கையின் பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த புலனாய்வு அலுவலர்கள் இரகசிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாகவும், OISLக்கு விலாசமிடப்பட்டுள்ள தகவல்களின் பிரதிகளை எடுப்பதற்கு எளிய வலைப்பின்னல் பொதி மோப்பம்பிடிக்கும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதாகவும் "தமிழ்நெற்" இணையதளம் குறிப்பிட்டுள்ளது.
http://www.tamilnet.com/art.html?catid=13&artid=37456 (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

**17. OISLக்கான சமர்ப்பணங்கள் பற்றி தம்மை எச்சரிக்கை செய்யுமாறு இணையதள மற்றும் புகைப்பட பிரதியெடுக்கும் வழங்குனர்களை இராணுவம் கேட்கின்றது**

OISLக்கு சமர்ப்பிப்பதற்காக சத்தியக்கடதாசிப் படிவங்களை யாரேனும் 'ஸ்கான்| செய்தால் அல்லது பிரதியெடுத்தால் அவர்கள் பற்றி தமக்கு அறியத்தருமாறு வன்னியில் இலங்கையின் இராணுவப் புலனாய்வாளர்களினால் இணையதள மற்றும் புகைப்படபிரதியெடுத்தல் வழங்குனர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் "தமிழ்நெற்" அறிக்கையிட்டிருந்தது.
http://www.tamilnet.com/art.html?catid=13&artid=37456 (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

## உ. அரசாங்கம் பற்றி விமர்சனக் கருத்துக்களை வழங்கக்கூடியவர்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்குத் தடைகள்

**18. அங்கீகாரமின்றி முன்னாள் யுத்த வலயத்திற்கு பிரயாணம் செய்வதிலிருந்து வெளிநாட்டவர்களுக்குத் தடை**

பாதுகாப்பு அமைச்சிலிருந்து முன்கூட்டிய அனுமதியின்றி தமிழர் பெரும்பான்மையிலான வடக்கு மாகாணத்தில் உள்ள அதன் முன்னாள் யுத்த வலயத்திற்கு பிரயாணம் செய்வதிலிருந்து வெளிநாட்டவர்களுக்கு இலங்கை அரசாங்கம் தடைவிதித்துள்ளது. "*வடக்குக்கு வருகைதரும் வெளிநாட்டவர்களுக்கான முன்கூட்டிய அனுமதி அமுல்படுத்தப்படுவதுடன், அங்கீகாரத்திற்காக வெளிநாட்டவர்கள் அல்லது சம்பந்தப்பட்ட தாபனங்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு எழுதவேண்டும்*" என அறிக்கையொன்றில் அரசாங்கத்தின் தகவல் திணைக்களம் தெரிவித்திருந்தது. வட மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களையும், வேறு இரு மாவட்டங்களில் உள்ள சில பகுதிகளையும் தடைசெய்யப்பட்ட பகுதிகள் உள்ளடக்குகின்றன. இராணுவத்தின் ஊடகப் பணிப்பாளரின் கூற்றுப்படி, தேசிய பாதுகாப்புக்கு ஊறுவிளைவிக்கின்ற அச்சுறுத்தலொன்றை முன்வைக்கும் தன்மையொன்றில் வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்களை வைத்திருந்த சிலர் செயற்பட்டதன் காரணமாகவே கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரயாணம் செய்த காலத்தின் போதே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டது. பிரயாணத் தடையானது வடக்குக்காக தமது உத்தேசமான வருகைதரல்களையும், தமது ஹொட்டேல் முன்னேற்பாடுகளையும் நிறுத்துவதற்கும் நூற்றுக்கணக்கான விருந்தினர்களை நிர்ப்பந்தித்த அதேவேளை ஏனையோர் ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டனர். மரண வீடுகள், திருமணங்கள், சமய நிகழ்ச்சிகள் மற்றும் உத்தியோகபூர்வ விடயங்கள் ஆகியவற்றுக்காக வருகைதந்தவர்கள் யாவரும் ஏதேனும் முன்கூட்டிய எச்சரிக்கை இன்றி ஓமந்தைச் சோதனைச் சாவடியில் வைத்து தடுக்கப்பட்டனர்.
http://www.sundaytimes.lk/141012/news/travel-restrictions-as-president-visits-north-122354.html (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)
http://www.defence.lk/new.asp?fname=Foreign_Passport_holders_traveling_to_the_North_20141030_02 (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

මාධ්‍ය කේන්ද්‍රය - රාජ්‍ය ආරක්ෂක හා නාගරික සංවර්ධන අමාත්‍යාංශය
ஊடக மையம் - பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு
MEDIA CENTRE - MINISTRY OF DEFENCE & URBAN DEVELOPMENT

No ; 152, Galle Road, Colombo - 03, Sri Lanka
Tel : +94112439757 Fax : +94112439737 E-mail : spokesman@defence.lk, media.mod.ud@gmail.com

**PRESS RELEASE**

Whilst welcoming and appreciating positive assistance rendered by Friendly Countries, International Organizations as well as Non Governmental Organizations in peace building and development, it is the duty of the Ministry of Defence and Urban Development to take appropriate measures to prevent negative interventions, particularly in the Northern Province.

Conscious of its duty towards maintaining national security and creating necessary conditions for national processes, the Ministry of Defence and Urban Development requests foreign nationals to obtain prior approval when they intend travelling to the north. It is also informed that the objectives and purposes of the projects or other reasons for which they intend to travel are also be clearly indicated.

Foreign nationals intending to travel to Northern Province can obtain approval by sending written requests to the following address/fax:

Secretary, Ministry of Defence and Urban Development
(Attention Military Liaison Officer)
15/5, Baladaksha Mawatha
Colombo 03.
Fax: +94112328109

**P R WANIGASOORIYA USP**
Brigadier
Director

15 October 2014

**19. ஓமந்தையில் உயர் உ.வி.தா. அதிகாரியும், நூற்றுக்கணக்கான ஏனையோரும் திருப்பி அனுப்பப்பட்டனர்**

வடக்குக்கு பிரயாணம் செய்வதற்கு முன்கூட்டிய அங்கீகாரம் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு வைத்திருப்போருக்கு அவசியம் என்ற தேவைப்பாட்டினைப் பாதுகாப்பு அமைச்சு வினைப்படுத்தியமையினால் ஓமந்தை சோதனைச் சாவடியில் ஓர் உயர் ஐக்கிய நாடுகள் அதிகாரி திருப்பியனுப்பப்பட்டார். ஒக்ரோபர் 8 புதன்கிழமை கிளிநொச்சி செல்லும் வழியில் ஐ.நா.வின் உணவு, விவசாய தாபனத்தின் (உ.வி.தா.) நாட்டுப் பிரதிநிதி பெத் குரோபோர்ட் அங்கு செல்வதற்கு மறுக்கப்பட்டார். உலக உணவு தினத்தைக் குறிப்பதற்காக உ.வி.தா. நாட்டுப் பிரதிநிதி அழைக்கப்பட்டிருந்த நிகழ்ச்சிகளுக்கு தன்னையும் அழைத்திருந்ததாக வட மாகாண விவசாய அமைச்சர் பி.ஐங்கரநேசன் தெரிவித்தார்;. எனினும், ஓமந்தைக்கு அப்பால் செல்வதற்கு Ms. குரோபோர்ட் அனுமதிக்கப்படவில்லை என அவருக்கு கூறப்பட்டது.
http://www.sundaytimes.lk/141019/news/top-fao-official-hundreds-of-others-turned-away-at-omanthai-123252.html (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

**20. இலங்கையிலிருந்து, வெளியேறுவதிலிருந்து கொல்லப்பட்ட 'சந்தேகநபரின்| மனைவி தடுக்கப்பட்டார்**

ஊடக அறிக்கைகளின் பிரகாரம், கொல்லப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்ட எல்.ரி.ரி.ஈ. உறுப்பினரான செல்வநாயகம் கஜீபனின் மனைவி இலங்கையிலிருந்து வெளியேறுவதிலிருந்து தடுக்கப்பட்டார். உறவினர் ஒருவரின் திருமணத்திற்காக சுவிட்சர்லாந்துக்கு பிரயாணம் செல்வதற்கான உத்தேசத்தை திருமதி கஜீபன் சர்மிளா கொண்டிருந்ததுடன், அவர் செல்லுபடியான சுவிஸ் 'விசா'வொன்றையும் கொண்டிருந்தார். சம்பவ வேளையில், விமான நிலையத்திற்கு சுவிஸ் தூதுவராலயத்தைச் சேர்ந்த அதிகாரிகள் வந்து, அவரை விடுவிக்குமாறு இலங்கையின் குடிவரவு அலுவலர்களை வேண்டிக் கொண்டனர். எனினும், அவரது கணவர் தொடர்பில் விசாரணையொன்று நடந்து கொண்டிருப்பதாகவும், அவர் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படமாட்டாரெனவும் குடிவரவு அதிகாரிகள் தெரிவித்தனர். 2014 மார்ச்சில், திருமதி சர்மிளா இலங்கைப் பொலிசின் பயங்கரவாத விசாரணைத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டார். ஆனால், அவர் மீது ஒரு போதும் குற்றம் சுமத்தப்படவில்லை என்பதுடன், பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார். கடல்கடந்த நாடுகளுக்கான பிரயாணத்தைக் கட்டுப்படுத்தும் ஏதேனும் நீதிமன்ற உத்தரவுகள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையிட்டு அறிக்கைகள் இருக்கவில்லை. கோபி எனவும் அறியப்பட்ட செல்வநாயகம் கஜதீபன் வேறு இரு தமிழர்களுடன் சேர்த்து அவர்களுக்கு எதிராக இலங்கையில் இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட மனிதவேட்டையின் பின்னர் கொல்லப்பட்டதுடன், அவர்கள் எல்.ரி.ரி.ஈ.ஐப் புத்துயிரளிப்பதற்கு முயல்வதாக இராணுவத்தினால் வலியுறுத்தப்பட்டது.
http://tamilguardian.com/article.asp?articleid=12460 (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

**21. விமான நிலையத்திலிருந்து இலங்கையை விட்டு வெளியேறுவதிலிருந்து முன்னாள் தடுப்புக்காவல் கைதி (ஒரு தமிழ்த் தாய்) தடுக்கப்பட்டார்**

சுந்தரலிங்கம் ராஜிதமலர் என்ற 57 வயதான தமிழ்த் தாய் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து நாட்டை விட்டு வெளியேறுவதிலிருந்து தடுக்கப்பட்டார். முன்னாள் தடுப்புக்காவல் கைதியொருவரான ராஜிதமலரின் மகன் சுந்தரலிங்கம் கஜதீபன் அல்லது தெய்வீகன் வன்னிக் காடுகளில் 2014 ஏப்ரலில் போலியானது எனக் கூறப்படும் சமர் ஒன்றில் இராணுவத்தினால் கொல்லப்பட்டார். அவரது மகனின் மரணத்தின் பின்னர் உடனடியாகவே பயங்கரவாத விசாரணைத் திணைக்களத்தினால் திருமதி ராஜிதமலர் கைது செய்யப்பட்டு, விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டார். அவரது கடவுச்சீட்டில் குத்தப்பட்ட ஆறு வருட கனேடிய 'விசா'வொன்றை அவர் கொண்டிருந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. எல்.ரி.ரி.ஈ.ஐப் புத்துயிரளிப்பதற்கான முயற்சியொன்றில் கஜதீபனின் சம்பந்தத்தை சம்பந்தப்பட்டவர்கள் இன்னுமே விசாரணை செய்து வருவதனால் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு ராஜிதமலரை அனுமதிக்க முடியாது என அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்தார். எனினும், அவரது கடல்கடந்த நாடுகளுக்கான பிரயாணத்தைக் கட்டுப்படுத்துவதற்கான ஏதேனும் நீதிமன்ற உத்தரவுள்ளதாகத் தோன்றவில்லை.
http://www.dailymirror.lk/54629/theiveegan-s-mother-prevented-from-leaving-sl (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)
http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=112577 (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

## ஊ. மாணவ செயற்பாட்டாளர்களை அடக்குதல்

### 22. சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவரின் உண்ணாவிரதம் தாக்கப்பட்டு, 20 பேர் காயமடைந்தனர்



தாக்குதலின் பின்னர்: களனி பல்கலைக்கழகத்தினதும், ரஜரட்டை பல்கலைக்கழகத்தினதும் மாணவர்கள் எதிர்ப்புக்களை மேற்கொள்கிறார்கள்

ஒக்ரோபர் 10 இரவு வேளை, பதுளை-கொழும்பு வீதியில் பம்பஹின்ன சந்தியில் சத்தியாக்கிரக இயக்கமொன்றில் பங்கெடுத்த சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் பெற்றோல் குண்டுகளுடனும், குறுந்தடிகளுடனும் ஆயுதபாணியிலான முகமூடி அணிந்த கும்பலினால் தாக்கப்பட்டனர். தாக்குதலைத் தொடர்ந்து 20க்கு மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்ததுடன், பம்பஹின்ன கிராமிய வைத்தியசாலையில் 13 பேர் அனுமதிக்கப்பட்டனர். இதில் 6 பேர் பின்னர் பலாங்கொடை ஆதார வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டனர். அரசாங்கத்தினால் நிருவகிக்கப்படும் பல்கலைக்கழகங்களில் பல்கலைக்கழக மாணவர் சங்கங்களை நீக்குவதை எதிர்த்தே சத்தியாக்கிரகத்தை மாணவர்கள் ஆரம்பித்திருந்தார்கள். பலதரப்பட்ட சம்பவங்களில் மாணவர்களை இடைநிறுத்தியதையும், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தப்படாததையும் எதிர்த்தே சத்தியாக்கிரகம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. http://www.sundaytimes.lk/141019/news/satyagraha-attackers-still-at-large-while-students-go-on-own-rampage-123091.html (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

### 23. 12 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்; ஈக்களுக்கு மாணவர்களை உயர் கல்வி அமைச்சர் ஒப்பிடுகின்றார்

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் ஒக்ரோபர் 6 அன்று ஆற்றிய உரையொன்றில் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்த மாணவர்களை உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க ஈக்களுக்கு ஒப்பிட்டதுடன், அவர்களையிட்டு தாம் பயப்படவில்லை எனத் தெரிவித்தார். இதனிடையே, பல்கலைக்கழகத்திற்கு வந்த அமைச்சர் திசநாயக்கவின் வாகனத்தை வழியில் தடுத்ததிற்காக 12 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.
http://www.sundaytimes.lk/141019/news/satyagraha-attackers-still-at-large-while-students-go-on-own-rampage-123091.html (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

### 24. உண்ணாவிரதமிருந்த மாணவ பிக்குகள் தாக்கப்பட்டனர்



சில மாணவ பிக்குகள் மீது தாக்குதல் நடத்தியோர் பயன்படுத்தப்பட்ட எஞ்சின் எண்ணெயை எறிந்தனர் (LankaViews Photo)

எதிர்ப்பிலான உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தின் மாணவ பிக்குகள் அடையாளம் காண முடியாத குழுவொன்றினால் தாக்கப்பட்டனர். தாக்குதல் நடத்தியோர் சில மாணவ பிக்குகள் மீது பயன்படுத்தப்பட்ட எஞ்சின் எண்ணெயை எறிந்தனர். உண்ணாவிரதம் ஆறு வாரங்களுக்கு மேல் நடந்து கொண்டிருந்தது. தாக்குதலுக்கு எதிராக ஹோமாகமவில் போராட்டமொன்று நடத்தப்பட்டது. கல்வி வசதிகளையும், தரங்களையும் மேம்படுத்துவதற்கு 10 கோரிக்கைகளை உண்ணாவிரதம் அடிப்படையாகக் கொண்டிருந்தது.
http://www.lankaviews.com/sn/index.php?option=com_content&view=article&id=21848:2014-10-02-21-31-42&catid=100:2014-06-19-06-05-56&Itemid=151 (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

http://www.lankaviews.com/sn/index.php?option=com_content&view=article&id=21806:2014-09-25-09-33-04&catid=69:2009-08-07-09-41-10&Itemid=130 (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

## 25. பொலிஸ் தாக்குதலில் 20 பல்கலைக்கழக மாணவர்கள் காயமடைந்தனர்



இலங்கையின் பாராளுமன்றக் கட்டிடத்திற்கு அருகில் ஒக்ரோபர் 21 அன்று போராட்டம் நடத்திய பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்ட கூட்டமொன்றினுள் பொலிசார் கண்ணீர்புகைக் குண்டை வெடிக்க வைத்ததுடன், இதில் 20 மாணவர்கள் காயமடைந்தார்கள். இவர்களில் 12 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். கூட்டம் கலைந்து செல்வதற்கு நீர் பீச்சியடிக்கப்பட்டது. மாணவர்கள் மீது நேரடியாகக் கண்ணீர்புகைக் குண்டைப் பொலிசார் வெடிக்க வைத்து வேண்டுமென்றே காயங்களை விளைவித்தார்கள் என ஒரு மாணவர் குழு வலியுறுத்தியிருந்தது. நேரில் கண்ட சாட்சியங்களின் பிரகாரம், போராட்டம் நடத்தியவர்களைச் சுற்றியும், தப்பிச் செல்லும் வழிகளை மறித்தும் பெருமளவு திசைகளிலிருந்து கண்ணீர்ப்புகைக் குண்டு வெடிக்கவைக்கப்பட்டது. சுவாசிப்பதற்கு பிரச்சனையைக் கொண்டிருந்த மாணவர்கள் பின்வாங்குவதற்கு முயற்சித்தனர். ஆனால், கூட்டத்தின் மையப் பகுதிக்குள் கண்ணீர்புகைக் குண்டு வெடிப்பின் இன்னொரு சுற்றினை அவர்கள் சந்திக்க நேர்ந்தது. சில மரங்களுக்குள் மறைவதற்கு முயற்சித்த மாணவர்களைச் சிக்கவைக்கும் வகையில் பக்கவாட்டில் பொலிசார் கண்ணீர்புகைக்குண்டை வெடிக்க வைத்ததாகக் கூறப்படுகின்றது. போராட்டங்கள் அமைதியானவை என அறிக்கைகளும், 'வீடியோ' சாட்சியமும் சுட்டிச்சொல்கின்ற போதிலும், பாராளுமன்ற அமர்வு நடந்து கொண்டிருக்கும் வேளையில் பாராளுமன்றத்தை நோக்கி மாணவர்களை பேரணியாகச் செல்வதற்கு அனுமதிப்பது பாதுகாப்புக்கான ஒரு பயமுறுத்தல் என பொலிசார் தெரிவித்தனர்.

மேலே: தாக்குதலில் காயமடைந்த மாணவர் (Photo: Internet)

http://www.amnesty.org/en/library/asset/ASA37/013/2014/en/77d973b8-c8e9-4b48-8fdd-117dae225789/asa370132014en.pdf (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

## எ. எதிர் அரசியல் கட்சிகளை அடக்குதல்

**26. எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும், இரு இதழியலாளர்களும் தாக்கப்பட்டனர்**

உண்மையைக் கண்டறியும் நோக்கத்தில் கொம்பனி வீதியில் உள்ள இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் பாதுகாப்புப் பயிற்சி நிறுவனத்திற்கு விஜயம் செய்த போது கும்பலொன்றினால் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றும், இரு இதழியலாளர்களும் தாக்கப்பட்டனர். ரவி கருணாநாயக்க, ஆர்.யோகராஜன், அஜித் பி. பெரேரா மற்றும் நளின் பண்டார ஜயமஹா ஆகியோரே உண்மையைக் கண்டறியும் தூதுக்குழுவில் பங்கெடுத்த ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்களாவர். நிறுவனத்தின் வளவை விட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறும் வேளையில், அவர்கள் மீது கற்கள் எறியப்பட்ட போது இரு இதழியலாளர்கள் காயமடைந்ததாக திரு.பெரேரா தெரிவித்தார். 2015 ஆரம்பத்தில் நடைபெறுவதற்கு எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதி தேர்தலுக்கான பிரச்சார விடயதானங்களைச் செய்வதற்காக அரசாங்க ஊழியர்களும், அரசாங்க ஆதனமும் பயன்படுத்தப்படுவதைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கண்டதாக திரு.பெரேரா தெரிவித்தார். http://www.dailymirror.lk/54673/journalists-among-unp-fact-finders-injured#sthash.9ZHt4zva.GqMaW99v.dpuf (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

**27. வட மாகாண சபை உறுப்பினர் விசாரிக்கப்பட்டார்**



ஒக்ரோபர் 18 அன்று வட மாகாண சபையின் தீவிரமான உறுப்பினர் ஒருவரான பாலச்சந்திரன் கஜதீபனை இலங்கையின் பெருமளவு இராணுவ வீரர்கள் விசாரித்தனர். *"ஏழாலையில் உள்ள எனது வீட்டுக்கு இராணுவ சீருடையில் மூன்று வீரர்கள் வந்து, எனது குடும்பத்தின் தனிப்பட்ட விபரங்களைப் பற்றி என்னிடம் விசாரித்தனர். என்னை விசாரிப்பதற்கு மேலதிகாரியிடமிருந்து உத்தரவுகளைத் தாம் பெற்றுக்கொண்டதாக அவர்கள் தெரிவித்தனர். வசாவிளான் இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி தானே என அவர்களில் ஒருவர் கூறினார்"* என தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த கஜதீபன் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. அவரது கூற்றின் பிரகாரம், அச்சுறுத்தும் தன்மையொன்றில் இராணுவ வீரர்கள் நடக்கவில்லை, ஆனால் *"நான் கண்காணிப்பின் கீழ் இருக்கின்றேன் என எடுத்துக்கூறும் ஒரு செய்தியை அல்லது ஒருவகையிலான எச்சரிக்கையை அவர்கள் எனக்கு வழங்க விரும்பினார்கள்"* என்பது மிகவும் தெளிவாக இருந்தது. http://www.colombomirror.com/?p=502 (கடைசியாக நொவ. 22 அன்று கையகப்படுத்தப்பட்டது)

மேலே: பாலச்சந்திர கஜதீபன் (Photo: Internet)